**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், தென்காசி**
**முன்னிலை: திரு.K.N.குரு, பி.ஏ.,பி.எல்.,**
**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி, தென்காசி**
2025–ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 17–ஆம் நாள் திங்கள்கிழமை
**அசல் வழக்கு எண்.108/2024**
**(அம்பாசமுத்திரம் அ.வ.எண்.91/2023)**
(CNR No.TNTS060008062024)

பாலகிருஷ்ணன் ..... வாதி

/எதிர்/

ராமசாமி ..... பிரதிவாதி

இவ்வழக்கானது இந்நீதிமன்றத்தின் முன்னர் இன்று (17.11.2025) விசாரணைக்கு வந்தபோது வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.M.ராஜேந்திரன் அவர்கள் முன்னிலையாகியும், பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.D.சைலபதி அவர்கள் முன்னிலையாகியும், வாதி தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள் தாக்கல் செய்வதற்காக வழக்கு நிலுவையில் இருந்த நிலையில், வாதி தரப்பில் சாட்சி மற்றும் சான்றாவணங்கள் தாக்கல் செய்யாத காரணத்தினாலும், வாதி தரப்பில் எவ்வித எடுத்துரைப்பும் இல்லாத காரணத்தினாலும், வாதியின் வருகையின்மைக்காகவும் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

## தீர்ப்புரை

அ) பிராது 1ம் தபசில் சொத்தின் கிழக்கு எல்கையை நிர்ணயம் செய்தும் அதாவது புலவரைபடம் 288–ல் கிழக்கு எல்கையில் உள்ள B மற்றும் C பாயிண்டை நிர்ணயம் செய்தும் தீர்ப்பு பிறப்பிக்கக்கோரியும்,

ஆ) பிராது 1ம் தபசில் சொத்தில் புலவரைபடம் 288–ல் கிழக்கு அத்தில் B மற்றும் C பாயிண்ட் வரை வாதிவேலி அமைப்பதோ பிரதிவாதியோ, அவரது வகையாட்களோ அல்லது ஏஜெண்டுகளோ, உறவினர்களோ எவ்விதத்திலும் இடையூறு செய்யக்கூடாதென நிரந்தர உறுத்துக்கட்டளை பிறப்பிக்கக்கோரியும், இவ்வழக்கின் செலவுத்தொகை வாதிக்கு, பிரதிவாதியிடமிருந்து கிடைக்கக் கோரியும் மற்றும் இதர பரிகாரங்கள் கோரியும் வாதியால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

List of witness not filed. Today, when the matter was called, the plaintiff was called absent and there was no representation on their behalf. It is pertinent to note that this is not the first hearing. On earlier occasions, this Court has granted sufficient opportunities to the plaintiff to take necessary steps to prosecute the suit. However, no effective action has been taken so far. Such prolonged inaction on the part of the plaintiff not only reflects a lack of diligence but also contributes to the mounting pendency of cases before the Court. Litigants are expected to prosecute their cases with due care and avoid causing unnecessary delay, as pendency adversely impacts the timely dispensation of justice. In these circumstances, the continued absence and lack of progress leave no reason to keep the matter pending any further. Accordingly, the suit is dismissed for non-prosecution.

2025–ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 17-ம் நாள் என்னால் இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

**ஒம்/–K.N.குரு**
**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி**
**தென்காசி.**